Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 8 |
| | | Defence | |
| Name | | திரு.ராஜ்குமார் | |
| Father's Name | : | திரு.அந்தோணிராஜ் | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 31 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of August 2026.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

முதல் விசாரணை :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் முத்துராமலிங்கம், கொம்பையா, சரவணன் ஆகியோர்களை தெரியும். சாட்சி சுடலைகுமார் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.05.2022ம் வருடம் அன்று நானும், சுடலைக்குமாரும் ரெட்டியார்பட்டி CSI சார்ச் பக்கம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பெருமாள்புரம் காவல் ஆய்வாளர் அவர்கள் சுப்பிரமணியன் கொலை வழக்கு சம்மந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வைமகஜரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வைமகஜர் **அ.சா.ஆ.2**

ஆகும். மேலும் சம்பவ இடத்தில் இருந்து 2 பீர் பாட்டில்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

அ.சா.1 முத்துராமலிங்கத்திற்கும் காமராஜர் தெரு என்றால் சரிதான். அவர் எனது உறவினரா என்றால் இல்லை. ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர். இறந்துபோன சுப்பிரமணியன் எனது நண்பர் என்றால் இல்லை. தெரிந்தவர். எத்தனை வருடங்களாக அவரை தெரியும் என்றால் 4, 5 வருடங்களாக தெரியும். நான் நின்றுகொண்டிருந்த CSI சார்ச் பக்கம் காலியிடம் எவ்வளவு பரப்பளவு இருக்கும் என்றால் 3-1/2 ல் இருந்து 4 ஏக்கர் பரப்பளவு இருக்கும். அவ்வளவு பரப்பளவு கொண்ட காலியிடத்தில் இருந்து அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்ட பொருட்கள் குறிப்பிட்ட எந்த திசையில், எந்த இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லஇயலாது என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு வேண்டியவர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளைத்தாளில் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்து நான் மேற்சொன்ன ஆவணங்கள் உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றிவிவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.97/2023 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 9 |
| | | Defence | |
| Name | | திரு.மணிவேல் | |
| Father's Name | : | திரு.சாமிக்கண்ணு | |
| Village | : | ரெட்டியார்பட்டி | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 46 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of August 2026.

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது ரெட்டியார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் முத்துராமலிங்கம், கொம்பையா, சரவணன் ஆகியோர்களை தெரியும். சாட்சி சேர்மன்துரை என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.05.2022ம் தேதி மதியம் 2.30 மணியளவில் ரெட்டியார்பட்டி பாலத்தின் கீழே நானும், சேர்மத்துரையும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பெருமாள்புரம் காவல் ஆய்வாளர் ரெட்டியார்பட்டி பாலத்தின் கீழே வைத்து 4 எதிரிகளையும் கைது செய்து விசாரித்தார்கள். எதிரி சிவநம்பி கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். அவர் வைத்திருந்த புல்லட்டை கைப்பற்றினார்கள். மற்றொரு

எதிரி பொன்பாண்டியிடம் இருந்து அப்பாச்சி பைக் ஒன்றை கைப்பற்றினார்கள். அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். எதிரி சிவநம்பி கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். எதிரி சிவநம்பி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** ஆகும். 3ம் எதிரி செந்தில்முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6** ஆகும். 4ம் எதிரி பொன்பாண்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.7** ஆகும். 1ம் எதிரியிடம் இருந்து TN 72 BR 1796 என்ற புல்லட் கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.8** ஆகும். 4ம் எதிரியிடம் இருந்து TN 75 M 1240 Apatchi பைக் கைப்பற்றியதற்கான அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

புகார்தாரரும், இவ்வழக்கில் இறந்துபோனவரும் எனது உறவினர்கள் என்றால் புகார்தாரர் எனது மாமா, இறந்துபோனவர் எனது மாமா மகன். அவரது இறப்பிற்கு சென்றிருந்தேனா என்றால் சென்றுயிருந்தேன். மற்றொரு சாட்சி சேர்மத்துரையும் எங்களது உறவினர் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்னர் நான் எதிரிகளை பார்த்து கிடையாது, நேரில் பரீச்சியம் கிடையாது என்றால் சரிதான். நான் நின்றதாக சொல்லும் இடம் நிறைய மக்கள் போக்குவரத்து உள்ள இடம் என்றால் சரிதான். அது வெட்டவெளிச்சமான இடம், அதில் மறைவிடம் எதுவும்

கிடையாது என்றால் சரிதான். வாகனங்கள் கைப்பற்றியதாகசொல்லும் இடமும் வெட்டவெளிச்சமான இடம் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்கள் எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்றால் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து எழுதிக்கொண்டார்கள். நாங்கள் நின்றதாக சொன்ன இடத்தில் வைத்து எழுதிக்கொள்ளவில்லை. விசாரிக்கமட்டும் செய்தார்கள். நான் கையெழுத்து செய்யப்பட்டதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலம் கைப்பட எழுதப்பட்டது. அதில் தான் நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் இருந்த சாட்சியும் அதே போல் தான் கையெழுத்து செய்தார். இறப்பு வீட்டிற்கு சென்றிருந்த என்னிடம் உறவினர் என்ற அடிப்படையில் எழுதாத வெள்ளைத்தாளில் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொள்டு பின்னிட்டு மேற்படி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை என் முன்பு கைது செய்ததாக சொல்வதும், விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்ததாக சொல்வதும், பைக்குகள் கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.